**தலைப்பு 17 – பாராளுமன்ற முதல்வரின் அலுவலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாராளுமன்ற முதல்வரின் அலுவலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற முதல்வரின் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற முதல்வரின் அலுவலகம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாராளுமன்ற முதல்வரின் அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியினால் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்தின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்பட்டுள்ளது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற முதல்வரின் அலுவலகத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற முதல்வரின் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- அலுவலகத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) 1.6.2 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்பின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றுநிருப ஏற்பாடுகளுடன் இணங்காமை

அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டி 06 இலக்கம் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அந்த தேவைப்பாட்டிலிருந்து விலகிய சந்தர்ப்பமொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள எண்ணிக்கை திறைசேரி புத்தகங்களின் எண்ணிக்கையுடன் ஒத்திருக்க வேண்டிய போதிலும், திறைசேரி புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 2,059,514 முற்பணப் பெறுகைகள் நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,928,299 ஆக காட்டப்பட்டுள்ளதன் காரணமாக ரூபா 131,215 வேறுபட்டுள்ளது. | 3.1 வழிகாட்டி அறிவுரையின் பிரகாரம் முற்பணக் கணக்கு திறைசேரி புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகளுக்கு இணங்கச் செய்யப்பட்டுள்ளதுடன் மேலும், 3.6 வழிகாட்டல் பந்தியின் பிரகாரம் ஏசீஏ 5 மாதிரியில் சரியான எண்ணிக்கை உள்ளடக்கப்பட்டுள்ளதாக | உரிய வழிகாட்டல்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். |

**1.6.2 நிதி நிலைமைக் கூற்று**

**ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப் படுகின்ற நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருப்பதாக சான்றுபடுத்தப்பட வேண்டிய போதிலும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றின் தொகைக்கும் மீளாய்வாண்டிலே நிதிக் கூற்றுக்களில் 2020 சனவரி 01 ஆந் திகதியில் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்குமிடையில் ரூபா 9,100,100 வேறுபாடொன்று காணப்பட்டது. | அனைத்து விடுபட்டவைகளும் மற்றும் பிழையான பதிவுகள் சரி செய்யப்பட்டு இணங்கச் செய்யப்பட்டிருப்பதுடன் இது திறைசேரியின் மென்பொருள் கட்டமைப்பில் ஏற்பட்ட குறைப்பாட்டுடனான பதிவுகளை சரி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட நடைமுறையே அல்லாமல் நிறுவனத்திற்குள் ஏற்பட்ட குறைபாடொன்றல்ல என்பதாக. | கணக்காய்வு மேற்கொள்ளப் படுகின்ற நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்க வேண்டும். |

**1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று**

**வைப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான ரூபா 186,610 வைப்பு பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகள், காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயலாற்றல்களிலான வைப்பு பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகளாக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சரி செய்வதற்கான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதாக | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வு பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க, 2009 யூன் 17 ஆந் திகதிய 09/2009(I) ஆம் இலக்க மற்றும் 2017 ஏப்ரல் 19 ஆம் திகதிய 03/2017 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றுநிருபம் | அலுவலக உத்தியோகத்தர் களின் உள்வருகை மற்றும் வெளிச் செல்கையை பதிவிடுவதற்காக கைவிரல் அடையாள இயந்திரமொன்று பாவனைக்குட்படுத்தப் பட்டிருக்கவில்லை. | 2021 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து கைவிரல் அடையாள இயந்திரத்தின் ஊடாக உள்வருகை மற்றும் வெளிச்செல்கைகள் உறுதிப்படுத்தப்படும். | சுற்றுநிருப ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | உள்ளபடியான கடமை நேரத்தின் பின்னர் செலுத்தப்படுகின்ற கொடுப்பனவுகளுக்காக நேரம்பயன்படுத்தப்படுவதனால் அந்த நேரங்கள் கைவிரல் அடையாள இயந்திரத்தின் ஊடாக உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக வரவுக் கொடுப்பனவுகள் மற்றும் பயன்படுத்தப்படாத எஞ்சிய விடுமுறை என்பவற்றுக்கான கொடுப்பனவுகள செலுத்தப்பட்டிருந்தது. | பாராளுமன்ற கூட்டங்கள் இடம்பெறுகின்ற தினங்களில் கடமையின் நிமித்தம் கட்டாயமாக அலுவலகத்தில் தரித்திருக்க வேண்டியதுடன் பி.ப 6.30 க்கு பின்னர் கூட்டங்கள் இடம்பெறுகின்ற சந்தர்ப்பங்களில் அந்த கொடுப்பனவை செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்று நிருப ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பெறுகைகள் திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
| --- | --- | --- |
| 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றுநிருபத்தின் பிரகாரம் பெறுகைகள் திட்டத்திலும் பெறுகையிலும் மதிப்பிடப்பட்ட கிரயம் பாதீட்டு மதிப்பீட்டுத் தொகைகளுக்கு சமனாக காணப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் திருத்திய பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்ட செலவு ரூபா 1,250,000 ஆக காணப்பட்ட போதிலும் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் அந்த செலவு ரூபா 1,500,000 | 2020 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டிற்குரிய நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு இந்த அலுவலகத்திற்கு நிதிஏற்பாடு கிடைத்திருக்கவில்லை. எவ்வாறாயினும், சுற்றுநிருப அறிவுரையின் பிரகாரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த வேலை முறையாக நிறைவேற்றப்பட்டதன் பின்னர் அலுவலக உபகரண பகுதியொன்றை அவசியமாக கொள்வனவு செய்ய வேண்டியதன் பொருட்டு திருத்தப்பட்ட பெறுகைத் திட்டமொன்று 2020 யூன் மாதத்தில் தயாரிப்பதற்கும், அத்திட்டத்தின் பிரகாரம் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளை பெற்றுக் கொள்வதற்கு 2020.06.19 ஆம் கடிதமொன்று பாதீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இருப்பினும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கும் போது தாமதக் குறையொன்றினால் 2020 சனவரியில் பெறுகைத் திட்டம் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், திருத்தப்பட்ட பெறுகைத் திட்டம் அனுப்பப்பட்டிருக்க வில்லை. | சுற்று நிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |